செய்தி வெளியீடு எண்: 457/2017

நாள்: 02.08.2017

**சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்!**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு!!**

வேலூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் (சுவச்சதா பக்வடா) தூய்மை இயக்கத்தின் சார்பில் 01.08.2017 முதல் 15.08.2017 வரை சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க தூய்மை பிறைகாலம் நிகழ்ச்சிகள் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 01.08.2017 அன்று பாரதப் பிரதமரின் செய்தி தூய்மை இந்தியா குறித்த உறுதிமொழியாக எடுக்கப்பட்டது. 02.08.2017 அன்று ராஜபாளையம், பார்சனப்பள்ளி, பாச்சல், வேப்பம்பட்டு, நெடும்புலி, ஜி.சி.குப்பம், வெட்டுவானம், கவுக்காபட்டு, நரசிங்கபுரம், வெப்பூர், புன்னபாடி, கரும்பூர், பரதராமி, அலமேலுமங்காபுரம், வாணியம்பாடி, மேட்டுக்குளம், பெரிய புதூர் காலனி, மேட்டூர், பள்ளிக்குப்பம், பெருங்காஞ்சி மற்றும் காலனி, ஸ்ரீராம்நகர், பெய்ராகிமடம் தெரு ஆகிய சொந்த கிராமங்களில் சுத்தம் செய்யும் நிகழ்ச்சிகள் நடைபெறும். 03.08.2017 அன்று743 கிராமப் பஞ்சாயத்துக்களிலும் சுத்தம் செய்யும் நிகழ்ச்சியும், 04.08.2017 முதல் 06.08.2017 வரை ஒவ்வொரு வீடாகச் சென்று சுத்தமாக, தூய்மையாக இருப்பதினால் ஏற்படும் நன்மைகளை விளக்கி, அது சம்பந்தமான விளம்பரத் தாள்களை கொடுத்தல் / வினியோகம் செய்தல், 07.08.2017 முதல் 10.08.2017 வரை ரயில் நிலையம், பேருந்து நிலையம், பஸ் டிப்போ, மார்க்கெட், பள்ளிகள், கல்லூரிகள், அங்கன்வாடி, பஞ்சாயத்து அலுவலகங்கள், தலைவர் சிலைகள், சரித்திரப் புகழ்பெற்ற இடங்களை சுத்தம் செய்தல், 11.08.2017 முதல் 13.08.2017 வரை துணை ஆலோசனை சுகாதார மையங்கள், அரசு சுகாதார மையங்கள், பொது நிறுவனங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றை சுத்தமாக / தூய்மையாக வைத்திருத்தல், 14.08.2017 அன்று பாதயாத்திரை, பேரணி நடத்துதல், வினாவிடை போட்டிகள், பெயிண்டிங், போஸ்டர் ஒட்டுதல், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகள் நடத்துதல், வாசகங்கள் எழுதுதல், தெரு நாடக நிகழ்ச்சிகள் நடத்துதல், குழு விவாதங்கள், பட்டிமன்றம், கருத்தரங்கம் போன்றவை நடத்துதல், போட்டிகள் நடத்தி தூய்மை / சுத்தத்தின் அவசியத்தினை வலியுறுத்துதல். இறுதியாக 15.08.2017 அன்று இருவார நிகழ்ச்சிகளை ஆய்வு செய்து வருங்காலத்தில் தூய்மை இந்தியாவை உருவாக்கிட திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இளைஞர் மன்றம் மற்றும் உறுப்பினர்களை ஊக்கப்படுத்துதல், சுவச் பாரத் மிஷன் லோகோவினை ஏற்றுக்கொண்டு அனைவருக்கும் புரியும்படி விளக்குதல், இந்தியாவின் மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரின் செய்திகளை வாசித்தல், சுத்தத்தைப் பற்றிய முக்கியச் செய்திகளை பேனர் மூலமாக விளக்குதல், பிரபலமான குடிமகள்களுடன் கூட்டம் நடத்தி சுத்தமான இந்தியாவை உருவாக்க திட்டமிடல் மற்றும் பணிகளைச் செய்தல் ஆகியவை சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க செய்ய வேண்டியவை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

02/8/17